# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
## (நிர்வாகக் கிளை)
### சுருக்கம்

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் - வாரிசு வேலை - கருணை அடிப்படையில் இறந்த வாரிய பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்குதல் - அரசு ஆணையை நடைமுறைப்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

-----------------------------------------------------------------------------------

(நிர்வாகக் கிளை)

| | |
|---|---|
| நிலை (முழு வாரியம்) | நாள் 09.11.2017 |
| த.நா.மி.உ.ம.ப.க. | ஹேவிளம்பி வருடம் |
| செயல்முறை ஆணை எண்.12 | ஐப்பசி மாதம் 23-ம் நாள் |
| | திருவள்ளுவர் ஆண்டு 2048. |

படிக்க

1) அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 16.07.1993.
2) வாரிய நிலை ஆணை எண்.330 (நிகி), நாள் 02.11.1993
3) அரசாணை (நிலை) எண்.165 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 30.08.2010.
4) வாரிய ஆணை (நிலை) எண்.13 (நிகி), நாள் 08.08.2011.
5) சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.14341/2012 தீர்ப்பு நாள் 17.04.2014.
6) அரசு தலைமை வழக்குரைஞரின் கருத்து எண்.82/15 நாள் 08.06.2015.
7) அரசாணை (நிலை) எண்.78 தொழிலாளர் மற்றும் வேலை வாயப்பு (க்யூ1)த் துறை, நாள் 21.04.2017.
8) நிலை (தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர்) த.நா.மி.உ.ம.ப.க. செயல்முறை ஆணை எண்.137 (நிகி) நாள் 25.07.2017.
9) 74வது முழு வாரியக் கூட்டம் நடைப்பெற்ற நாள் 31.10.2017 (வரிசை எண்.8)

!!!!!

**செயல்முறைகள்-**

பணியிடை மரணமடைந்த வாரியப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் வாரிசு வேலை வழங்குவது சம்மந்தமாக ஏற்கனவே பார்வை-8ல் வெளியிடப்பட்ட நிலை (தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர்) த.நா.மி.உ.ம.ப.க. செயல்முறை ஆணை எண்.137 (நிகி) நாள் 25.07.2017 இதன் மூலம் இரத்து செய்யப்படுகிறது.

..2..

2) ஏற்கனவே அரசாணை நிலை எண்.155, நாள் 16.07.1993-ல் கணவனால் கைவிடப்பட்டு பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் குடும்பத்தில் வசித்து வரும் மகளுக்கு அவ்வாறு வசித்து வரும் விதவை மகள் மற்றும் விவாகரத்துப் பெற்ற மகளுக்கும் பணியிடை இறந்த வாரியப்பணியாளரின் வாரிசுதாரர் என்ற முறையில், இறந்த அரசு ஊழியரின் கணவன்/மனைவி அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பணிநியமனம் வழங்க பரிசீலனை செய்யலாம் என அரசாணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையை பின்பற்றி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் நடைமுறைப்படுத்தி வாரிய நிலையாணை எண்.330, நாள் 02.11.1993 மூலம் உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

3) அதனை தொடர்ந்து அரசாணை நிலை எண்.165, நாள் 30.08.2010-ல் கருணை அடிப்படையிலான பணிநியமனங்கள் கோரும் நேர்வுகளில் பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர் என வரையறுக்கப்பட்டுள்ள நபர்களில் திருமணமாகாத மகள் என்ற நிலையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்து பணிநியமனம் வழங்கப்படுவதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டவர்கள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கும் பணி நியமனம் வழங்கிட வழிவகை செய்யும் வகையில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையை பின்பற்றி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் வாரிய நிலையாணை எண்.13, நாள்.08.08.2011-ன் வாயிலாக உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

4) தமிழக அரசின் அரசாணை (நிலை) எண். 78, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை (ஹ1) நாள் 21.04.2017-ல் வெளியிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் நடைபெற்ற 74-வது முழு வாரிய கூட்டத்தில் மேற்கூறிய அரசாணையை நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

| | |
|---|---|
| அ | திருமணமான பெண்ணுக்கு வாரிசு அடிப்படையில் பணி வழங்கப்படும் போது அரசாணை (நிலை) எண்.165 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 30.08.2010-ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஆ | இறந்த வாரிய ஊழியரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களின் கருணை அடிப்படையிலான பணி நியமனக் கோரிக்கை மனு, உரிய மூன்றாண்டு காலத்திற்குள் வழங்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டிருப்பின் அதன் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நிலுவையில் உள்ள இனங்களையும் அவ்வாறு நிராகரிக்கப்பட்டு, நீதிமன்றம் செல்லாமல் அரசு அலுவலகங்களில் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் இனங்களையும் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்யும் பட்சத்தில் பணி நியமனம் வழங்க பரிசீலனை செய்யலாம். |
| இ | மேலே இனம் (ஆ)-ல் கண்ட இருவகைப்பட்ட தனியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் போது இந்நேர்வின் கீழ் பரிசீலனை செய்யப்படும் விண்ணப்பதாரர் எவரும் அவருக்கு மாற்றாக மற்றொருவருக்கு பணி கோரி மாற்று விண்ணப்பங்களை அளிக்க இயலாது. |
| ஈ | மேலே இனம் (ஆ)-வை தவிர வாரிய ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் திருமணமான பெண் வாரிசுதாரர்களால் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்து வாரியத்தால் நிராகரிக்கப்பட்ட இதர நேர்வுகளை, முறையே நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகளுக்குட்பட்டு தனித்தனியாக பரிசீலிக்கலாம். |
| உ | பணியிடை இறந்த வாரிய ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டபின், இறந்த வாரிய ஊழியரின் கணவன்/மனைவி ஆகியோர் வாரிசுதாரர்களில் எவரை கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற பரிந்துரை செய்கிறாரோ, அவருக்கே பணிநியமனம் வழங்க பரிசீலிக்கப்பட வேண்டும். |

5) பார்வை 7-ல் குறிப்பிட்டுள்ள அரசாணையினை பின்பற்றி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் (மற்றும்) தமிழ்நாடு மின்வாரிய நிறுவனம் ஆகியவற்றில் நடைமுறைப்படுத்த இதன் மூலம் ஆணையிடப்படுகிறது

(முழுவாரிய ஆணையின்படி)

அ.வெ.ரவி
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

ஒப்பம்/-09.11.2017
கண்காணிப்பாளர்

<u>**பெறுநர்-**</u>

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்.
அனைத்து கூடுதல் தலைமைப் பொறியாளர்கள்/மேற்பார்வை பொறியாளர்கள்.

<u>**நகல்**</u>-
அனைத்து இயக்குநர்/மின் தொடரமைப்பு/பகிர்மானம்/உற்பத்தி/திட்டங்கள்/இயக்குதல்/சென்னை-2.
காவல் துறை இயக்குநர்/விழிப்புப்பணி/சென்னை-2.
செயலர்/செயலகக் கிளை/சென்னை-2.
செயலாண்மை உதவியாளர்/தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர்/சென்னை-2.
தலைமை நிதி கட்டுப்பாடு அலுவலர்/பொது கூ வருவாய்/கணக்கு பிரிவு சென்னை-2.
தலைமை அகநிலைதணிக்கை அலுவலர்/சென்னை-2.
சட்ட ஆலோசகர்/சட்ட குழுமம்/சென்னை-2.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக்கிளை/சென்னை-2.
அனைத்து துணைச்செயலாளர்கள்/செயலகக்கிளை/சென்னை-2.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/தொழிலாளர்/நிர்வாகக்கிளை/சென்னை -2.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆட்சேர்ப்பு/நிர்வாகக்கிளை/சென்னை-2.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆய்வு மற்றும் பொது தகவல் அலுவர்
அனைத்து பணித்தொகுதி அலுவலர்கள்/நிர்வாகக் கிளை/சென்னை-2.
சார்பு செயலர்/ஊதிய முறைப்படுத்துதல் பிரிவு/செயலகக்கிளை (வாரிய ஆணைகள் பிரிவு (2 நகல்கள்)
அனைத்து உதவிப் பணித்தொகுதி அலுவலர்கள்/நிர்வாகக்கிளை
உதவிப் பணித்தொகுதி அலுவலர்/தமிழ் வளர்ச்சி (2 நகல்கள்)